**இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனி - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை சிறிய மற்றும் நடுதர அளவிலாக தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை சிறிய மற்றும் நடுதர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியுமானவாறு தேவையான உள்ளக கட்டுப்பாட்டுகளை நிர்ணயிக்கின்ற பொறுப்பு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் கணக்காய்வுடன் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட முகாமைத்துவத்தின் கணக்காய்வுச் தொடர்ந்தியங்கும் சான்றுகளை கணக்கீட்டு அடிப்படையாகக் எண்ணக்கரு கொண்டு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையாகக் கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால சிக்கனமாகவும் வரையறைகளினுள்ளேயும் வினைத்திறனாகவும் பொருத்தமான ஆக்கபூர்வமாகவும் சட்டங்களிற்கிணங்கவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடன் தொடர்பான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியம இலக்கம் 23.14 பிரகாரம் சேவை வழங்குவது தொடர்பான கொடுக்கல் வாங்கல் ஒன்றின் விளைவை நம்பத்தகுந்த வகையில் மதிப்பிட முடியுமான போது அறிக்கையிடும் காலப்பகுதின் இறுதியில் கொடுக்கல் வாங்கலின் நிறைவு செய்த கட்டத்திற்குரிய வருமானத்தை இனங்காண | கம்பனியினால் சேவை வழங்கும் போது 40% ஆன தொகையை பெற்றுக்கொள்வது பூர்வ முற்பணம் அல்லாததுடன் அது கருத்திட்ட வருமானத்தின் 40% ஆவதுடன் அதற்காக கருத்திட்டத்திற்குரிய ஆரம்ப விண்ணப்பம் அனுப்புவது | நியமம் பிரகாரம் வருமானத்தை இனங்காணுவது தொடர்பான கொள்கையை நதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு ஊடாக வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பனியினால் மீளாய்வாண்டின் போது சேவை வழங்குதற்குரியதாக உடன்படிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொணடிருந்த 40 சதவீத பூர்வ முற்பணத் தொகையை வருமானமாக இனங்கண்டிருந்த போதும் வருமானத்தை இனங்காணுவது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | மற்றும் மீளாய்வு செய்தல், கிரயத்தை தயாரித்தல், நடுநிலைமையான அறிக்கை மற்றும் ஆபத்து அறிக்கை தயாரித்தல், கருத்திட்ட உத்தேச முறையை தயாரித்தல் ஆரம்ப ஒன்றுகூடல் நடாத்துவது, மூலோபாய பகுப்பாய்வு மேற்கொள்ளல், ஒப்பாய்வு ஆபத்தை மதிப்பீடு செய்தல், ஒப்பாய்வு திட்டத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அங்கீகரித்தல் ஆகியவற்றை சேவைகள் வழங்கும் கம்பளியினால் வாடிக்கையாளருக்கு வழங்ப்படும். | |
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமான கிரயம் ரூபா 5,320,075 ஆன ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம் முடிவடைந்துள்ள போதும் மீளாய்வாண்டினுள் அச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியமம் 17.19 இலக்க பந்தி பிரகாரம் அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் சரியாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் செம்மைக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமித்துள்ளதுடன் தற்போது மீள் மதிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கம்பனியின் மோட்டார் வண்டிகளை மீள் மதிப்பிடுவதற்காக குழுவொன்றை நியமித்து தருமாறு சுற்றாடல் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | நியமம் பிரகாரம் வருடாந்தம் பயனுள்ள ஆயட் காலத்தை மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (இ) | இலங்கை சிறிய மற்றும் நடுதர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியமம் 29.6 பிரிவின் பிரகாரம் கம்பனியினால் மீளாய்வாண்டிற்கு உரியதாக ரூபா 4,564,356 ஆன வருமான வரியை இனங்காண வேண்டிய போதும் அந்த வரிப் பொறுப்பை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படகின்றது. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வரி வருமானத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்ககப்படும். | நியமம் மற்றும் நடைமுறை வருமான வரி சட்டங்கள் பிரகாரம் வருமான வரி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கம்பனி கெப் வண்டியொன்று பயன்படுத்தியிருந்த போதும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியம இலக்கம் 2.19 பிரகாரம் 2024 | இந்த கெப் வண்டி சுற்றாடல் அமைச்சிற்கு சொந்தமான கெப் வண்டியாகைதால் கம்பனியின் நிதி நிவைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் | நியமம் பிகாரம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 திகதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் அதன் பெறுமதியை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை. | |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் கணக்கீட்டுக் கொள்கையினுள் காண்பித்துள்ளவாறு அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடனிற்காக ஒதுக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டிக்காக ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக் கடனிற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக் கடனிற்காக ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வினால் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களத்தினால் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2021 ஆண்டு முதல் 2023 வரை ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை செலுத்துதல் தாமதித்ததன் மீது ரூபா 507,700 ஆன மிகை அறவீடு மற்றும் 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகை செலுத்துதல் தாமதித்ததன் ரூபா 91,263 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்த போதும் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை இந்த தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கம்பனியினால் அந்த மிகை அறவீட்டுத் தொகையை செலுத்துவது தொடர்பாக ஏற்படும் பொறுப்பை நிதிக்கூற்றுக்களின் இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை செலுத்துதல் தாமதித்ததன் மீது ரூபா 507,700 ஆன மிகை அறவீடு அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் தாமதித்ததன் மீது ரூபா 91,263 ஆன மிகை அறவீடு கம்பனிக்கு கிடைக்கவில்லை. 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை மீது மற்றும் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமால் கம்பனியின் வருமானம் மிகக் கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் கம்பனியில் சம்பள செலுத்துவதும் | பொறுப்புகளை உரியவாறு இனங்கண்டு கணக்கீட்டு நியமம் பிரகாரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரச்சினைக்குரியதானது. இந்த நிலைமையின் கீழ் அக் காலப்பகுதியினுள் உரியவாறு பங்களிப்பு தொகை செலுத்த முடியாமல் போனதுடன் தற்போது உரியவாறு பங்களிப்பு தொகை செலுத்தப்படுகிறது. | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 16,092,645 ஆன வியாபார பெற வேண்டியவை தொடர்பாக கடன்பட்டோர் கால பகுப்பாய்வு, விரிவான அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிபாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 2022 மற்றும் 2023 ஆண்டுகளிலும் மேற்குறித்த விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் அந்த விபரங்களை எதிர்வரும் கணக்காண்டின் போது கணக்காய்விற்கு பெற்றுத்தருவதாக நகழ் அறிக்கைக்காக சமர்ப்பிக்கப்ட்ட பதிழ் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த பெற வேண்டிய வியாபார மீதியின் இருப்பு மற்றும் சரியானதன்மை தொர்பாக நிச்சயமற்ற தன்மை அவதானிக்கப்ட்டது. | வியாபார பெற வேண்டியவை தொடர்பாக இந்த அறிக்கை மூலம் குறிப்படப்பட்டுள்ள விடயங்கள் மீதான அறிக்கைகள் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். | வியாபார பெற வேண்டியவை தொடர்பான மீதிகளை உறுதி செய்து கொள்ள குறித்த விரிவான தகவல்கள் நிறுவனத்தினால் பேணிச் செல்லப்பட வேண்டும். |

**1.7 சட்டம், விதி, பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமமானங்களிற்கு இணங்காமைகள்**

| | சட்டம், விதி, பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 இலக்க கம்பனி சட்டத்தின் 131 (1) பரிவு | ஒவ்வொறு கம்பனியினாலும் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனம், கம்பனியினால் வெளியிடப்பட்டுள்ள மொத்த பங்குகளின் எண்ணிக்கை, இழக்கப்பட்ட பங்கு | இப் பணிகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கம்பனிச் சட்ட பிரிவின் பிரகாரம் குறித்த விடயங்கள் உள்ளிட்ட வருடாந்த அறிக்கையொன்றை கம்பனி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை, கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி மற்றும் அலுவலகத்தின் முகவரி போன்ற விடயங்கள் உள்ளிட்ட வருடாந்த அறிக்கை, கீழான நபர்களின் ஒவ்வொறு ஆண்டிற்கு ஒரு முறை உரிய படிவத்தில் பதிவாளரிற்கு கையளிக்க வேண்டிய போதும் கம்பனியினால் 2020 ஆண்டின் பின்னர் அவ்வாறான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | பதிவாளரிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் 16(1) பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை கணக்கிடும் போது ஊழியரின் அடிப்படை சம்பளம் மற்றும் அங்கீகார படிகள் கவனத்திற் கொள்ள வேண்டிய போதும் கம்பனியினால் ஆரம்பம் முதலே அந் நிதியங்களிற்கு பங்களிப்புத் தொகையை கணக்கிடும் போது ஊழியரின் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்கை செலவுப் படியை மாத்திரம் கவனத்திற் கொண்டுள்ளமை மற்றும் ஏனைய படிகள் மற்றும் தொலைபேசி படியை கவனத்திற் கொள்ளாததன் காரணமாக மீளாய்வாண்டிற்காக மாத்திரம் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகை ரூபா 54,093 தொகை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஜுன் மாதம் முதல் ஊழியரின் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்கை செலவுப் படிகளை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படுகிறது. | சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பிரமாணங்களின் பிரகாரம் இனங்காணும் சம்பளத்தின் மீது ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு தொகை கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 2.3 | கம்பனி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்துடன் செயல் நடவடிக்கை திட்டம், வருடாந்த வரவு செலவு திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | எனது இலக்கம் SLCF/VD/T&W மற்றும் 2024.10.09 திகதிய கடிதம் மூலம் இந்த அறிக்கை சுற்றாடல் அமைச்சிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் உரிய திகதியில் குறித்த திட்டம் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 93(1) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டு முடிவின் பின்னரும் 08 மாதங்களை விஞ்சாத காலத்தினுள் குறித்த மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான அறிக்கை ஒன்றை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கோவையிட வேண்டிய போதும் கம்பனியினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. | இது தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் குறித்த வருமான அறிக்கையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறு செய்யாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிடம் இது தொடர்பாக காரணம் வினவப்பட வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,112,908 ஆன இலாபம் ஒன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 13,482,727 ஆனது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 1,630,181 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு கருத்திட்ட வருமானம் ரூபா 6,485,133 இனால் வளர்ச்சியடையும் போது சம்பளம் மற்றும் நிர்வாக செலவினமும் ரூபா 4,059,472 இனால் வளர்ச்சியடைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறமை இன்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் குறிக்கோளாக “காபன் நடுநிலை மற்றும் காலநிலைக்கு ஏற்ற நீல பசுமை பொருளாதாரம்” என்னும் மற்றும் செயற் பணியாக “2048 ஆண்டளவில் காபன் நடுநிலையினை அடைந்து கொள்ள உதவுவதற்காக குறைந்த காபன் மற்றும் காலநிலைக்கு ஏற்ற கருத்திட்டம் மற்றும் நிகழ்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்” இனங்கண்டிருந்ததுடன் அதற்காக | இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனியின் யாப்பின் பிரகாரம் (Articles of Association) நிறுவப்பட்ட நோக்கங்களை நிறுவனத்தின் கருத்திட்ட மற்றும் ஒப்பாய்வு பிரிவின் தலையீட்டுடன் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படுவதுடன் ஒரு சில செயற்பாடுகள 2024 – 2028 மூலோபாய திட்டத்தின் பிரகாரம் | நிறுவன நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் செயல் நடவடிக்கை திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் அடிக்கடி |

கம்பனி 17 நோக்கங்களை இனங்கண்டிருந்தது.
நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள பணிப்பாளர் சபையினால் தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைக்கு இணங்க மூலோபாய திட்டத்தின் ஊடாக மூலோபாய கட்டளைகளை (Strategic Directions) தயாரித்து செயற்படுத்த வேண்டியதுடன் செயலாற்றுகை மேற்பார்வைக்காக நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பிரதான தரப்பினர்களின் தேவைப்பாட்டை கவனித்திற் கொண்டு பின்னரான மீளாய்வு பொறிமுறையொன்றை நிறுவனப்படுத்தல் மற்றும் பணிப்பாளர் சபையினால் இனம் காண்ட அனைத்து நோக்கங்களுக்காகவும் (KPI) பிரதான செயலாற்றுகை சுட்டிகளை இஸ்தாபிக்க வேண்டும்இ அவ்வாறே நிறுவனத்தின் நோக்கங்கள் செயற்படுத்துவது தொடர்பான மீளாய்வினை மேற்கொண்டு குறித்த நோக்கங்கள் அடையப்பெறும் வகையில் செயற்பாடுகளை திருத்தம் செய்ய வேண்டும.
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் பிரதான கடமையினுள் பணிப்பாளர் சபையினால் இனம் காணப்பட்ட நோக்கங்கள் மட்டும் பிரதான செயலாற்றுகை சுட்டியை அடைந்து கொள்ள முடியுமான மூலோபாய செயற்பாட்டு திட்டத்தை அபிவிருத்தி செய்தல் உள்ளடங்கிய போதும் மீளாய்வாண்டினுள் கம்பனியின் வெளியிடப்பட்ட 17 நோக்கங்களில் 13 இனை அதாவது 76 சதவீதத்திற்கு கிட்டிய அளவை அடைந்து கொள்வது தொடர்பான செயற்பாடுகளை இனங்கண்டு செயற்படுத்தி இருக்காதமை மற்றும் 2016 ஆண்டு முதல் இனங்கண்டிருந்த மேற்குறித்த 17 நோக்கங்களிற்கு இடையே 08 நோக்கங்களிற்குரிய எவ்வித செயற்பாடுகளையும் கம்பனி ஆரம்பம் முதல் கணக்காய்வு திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் கம்பனியின் நோக்கங்களை காலத்திற்கு ஏற்றவாறு பின்தொடர் செய்து சரியாக மீளாய்வு செய்து உரிய காலப் பகுதியினுள் ஊழியர் ஆட்சேர்ப்பு, பயிற்றுவித்தல் மற்றும் நிறுவனத்தின் ஏனைய தொழிநுட்ப அபிவிருத்திகளின் பின்னர் செயற்படுத்தல் மேற்கொள்ளப்படும். ஒரு சில நோக்கங்கள் உபகரண விலைகள் அதிகரித்தமை, உதிரிப்பாகங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதன் விலைகள் அதிகரித்தல, வெளி தொழிநுட்ப நிபுணத்துவ கட்டணம் அதிகரித்தமை போன்ற தொழிநுட்ப காரணங்களின் மீது செயற்படுத்துவது கடினமாகையால் அந்த நோக்கத்தை மாற்றுவது தொடர்பாக 2025 ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்படவுள்ளது.
இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனியின் நோக்கம் மாற்றமடைவது தொடர்பாக 2023 ஆண்டு முதல் நிதி அமைச்சினால் எழுத்து மூலம் அறிவுரை கோரியுள்ளதுடன் அந்த பணியை மீண்டும் கம்பனி செயலாளர் ஊடாக நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். கம்பனி மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான சேவைகளின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் புதிய ஒரு சேவையையேனும் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் தொடர்ந்து இடம்பெறும் ஊழியர கேட்டு விலகுதல் அதிகரிக்கின்றமை மற்றும் புதிய அலுவலர்கள் கடமைக்கு பழக்கிக்கொள்ள ஓதாண்டைவிட அதிக காலம் செல்வதன் காரணமாக ஒரு ஆண்டிற்கு புதிய வியாபார ரீதியான கருத்துக்கள் சிலவற்றை செயற்படுத்த முடியாது போன போதும் 2024 – 2028 மூலோபாய திட்டத்தின் பிரகாரம் புதிய சேவைகளை ஆரம்பிக்க 2022 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அவற்றின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய வேண்டும்.

நிறுவனத்தின் சாத்தியப்பாட்டை இனங்கண்டு அந்த நோக்கத்தை கால அட்டவணை படி அடைந்து கொள்ள / திருத்தங்களை மேற்கொள்ள அல்லது அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலில் பந்தி இலக்கம் 3.2 (i) நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை, சம்பளம் மற்றும் படிகள் பரிமாணம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்து சேவை திணைகளத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அந்த் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை | நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை நகல் தற்போது தயாரித்துள்ளதுடன் அவ்வப் போது அது தொடர்பாக முகாமைத்துது சேவை திணைக்களத்துடன் கலந்துரையாடி திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது. அதன் பிரகாரம் குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது | சுற்றறிக்கை பிரகாரம் தாமதமின்றி ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |